# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.5

**Deposition of witness for }**

**Defence: -**

**Case No.** Sessions Case No.78/2015

| **Name** | மாயழகு | **S/o.** | உடையனசாமி |
|---|---|---|---|
| **Village** | வேலூர் ஒத்தவீடு | **Taluk** | மானாமதுரை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.5 |
| **Date** | 20.12.2021 | **Age** | 32 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 20.12.2021.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மானாமதுரை சிப்காட்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி பாண்டித்துரையை எனக்கு தெரியும். சம்பவத்தில் இறந்துபோன பாண்டித்துரை மனைவி ராஜேஸ்வரி, இருளப்பன் மனைவி தனபாக்கியம், அழகு மனைவி ஆறுமுகம் ஆகிய மூவரையும் எனக்கு தெரியும். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயத்திலும் நான் தனியார் நிறுவனத்தில்தான் வேலை பார்த்து வந்தேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரிக்கும்போது எங்கள் வீட்டருகே உள்ள இருளப்பன் என்பவருக்கு இரு பிள்ளைகள் என முதலில் பதட்டத்தில் சொல்லிவிட்டதாகவும், ஆனால் இருளப்பனுக்கு ராஜேஸ்வரி, கார்த்தீஸ்வரி, கண்ணன் ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளதாகவும், மூத்த மகள் ராஜேஸ்வரியை எதிரி பாண்டிதுரைக்கு சம்பவத்திற்கு ஒன்றறை ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்ததாகவும், அவர்களுக்கு தென்பாண்டி என்ற பெயருடைய 5 மாத ஆண் குழந்தை உள்ளதாகவும், திருமண தேதி முதல் பாண்டித்துரை எந்த வேலைக்கு செல்லாமல் குடித்துவிட்டு வந்து ராஜேஸ்வரியிடம் தகராறு செய்து வந்ததாகவும், ராஜேஸ்வரியை வரதட்சணை கேட்டு எதிரி பாண்டித்துரை அவரது தாயார், சகோதரி ஆகியோர்கள் கொடுமைபடுத்தியதாகவம், அது சம்மந்தமாக மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் நான் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 06.01.2015-ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், எனது அம்மா முத்துராக்குவும் எங்கள் வீட்டின் அருகில் நின்றபோது வேலூர் கிராமத்தை சேர்ந்த இருளப்பன் உறவினர்கள் முனியாண்டி மகன் வீராச்சாமி கோவிந்தன் மகன் குஞ்சரம் ஆகியோர் ராஜேஸ்வரி குழந்தையை பார்க்க வந்ததாக நான் காவல் துறையில் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர்களுடன் சேர்ந்து நானும், எனது அம்மா

முத்துராக்குவும் ராஜேஸ்வரி குழந்தையை பார்க்க சென்றோம் என்றும், வீட்டின் வாசலில் ராஜேஸ்வரி தன் குழந்தையுடன் நின்று கொண்டிருந்ததாக காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அப்போது எதிரி பாண்டித்துரை டி என் 63 கே 9093 என்ற மோட்டார் சைக்கிளில் வந்து ராஜேஸ்வரியிடம் குழந்தையை கேட்டு தகராறு செய்ததாகவும், ராஜேஸ்வரி குழந்தையை தர மறுத்ததால் எதிரி பாண்டித்துரை தன் முதுகில் வைத்திருந்த அருவாளை எடுத்து ஏண்டி தேவடியா முண்டை எனது குழந்தையை கொடுக்க மாட்டியா என சத்தம்போட்டு ராஜேஸ்வரியை வெட்டியதாகவும், தடுக்க வந்த தனபாக்கியத்தையும், ராஜேஸ்வரியின் அப்பத்தா ஆறுமுகத்தையம் தனது அருவாளல் சராமரியாக வெட்டி கீழே சாய்த்து விட்டார் என்றும், அப்பொழுது நானும், எனது தாயாரும் சத்தம் போட்டோம் என்றும், எங்களை பார்த்து எதிரி பாண்டித்துரை என்னை பிடிக்க முயன்றால் உங்களுக்கும் இதே கதிதான் என்று மிரட்டி விட்டு எதிரி பாண்டித்துரை குழந்தையை தூக்கிக்கொண்டு கிழக்குப்பக்கமாக ஓடிவிட்டார் என்றும், நாங்கள் எங்கள் உறவினருக்கும் தகவல் கொடுத்துவிட்டு நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க சிப்காட் காவல் நிலையத்திற்கு வீராச்சாமி புகார் கொடுக்க சென்றார் என்ற விவரம் தெரியும் என்றும், காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி பாண்டித்துரை உள்ளூர்காரர். அவர் உறவினர் என்றால் சரியல்ல. எதிரி பாண்டித்துரை எனக்கு உறவினர் என்றும், அவரை

வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கில் ஏற்கனவே நான் காவல் ஆய்வாளர் விசாரிக்கும்பொழுது சொன்ன விவரங்களை மாற்றிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.